In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 40/2008

Prosecution witness P.W.1

Name: Ganesan

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 17.03.2026.

**(A1 died. A4 absent, petition u/s 355 BNSS. filed and allowed and other accused present.)**

முதல் விசாரணை :–

நான் எஸ்.தும்மலப்பட்டியில் வசிக்கிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். சுமார் 10, 20 வருடங்களுக்கு முன்னர் நான் வேலைக்கு போய்விட்டு இரவில் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது மரியாயிபட்டி அருகில் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். போலீசார் நின்று கொண்டிருக்கிறார்களே விபத்து எதுவும் நடந்துவிட்டதா என பார்க்கப்போனேன். எதேச்சையாக கண்ணன் என்பவர் அந்த பக்கமாக வந்தார். போலீசார் அந்த இடத்தில் நின்றுகொண்டு பேசிக்கொண்டு எழுதிக்கொண்டார்கள். என்னை யார் என்று விசாரித்தார்கள். பின்னர் என்னிடம் ஒரு கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன். என்னுடன் கண்ணன் என்பவரும் கையெழுத்து போட்டார். அந்த இடத்தில் ஒரு பஸ் நின்றுகொண்டிருந்தது. அந்த இடத்தில் இருந்து போலீசார் பொருள் எதுவும் எடுத்தார்களா என நான் பார்க்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ.1. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, வத்தலக்குண்டு–திண்டுக்கல் ரோட்டில் மருதாநதி பாலம் அருகே அரசு பேருந்தை சேதம்விளைவித்த இடத்தை போலீசார் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் கண்ணனும் உடனிருந்து கையெழுத்து செய்தததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**4, 5, 6 மற்றும் 9 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து மட்டும் போட்டேன் என்றால் சரிதான்.

**2, 3, 7, 8, 10, 11 மற்றும் 13 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசார**ணை –4, 5, 6 மற்றும் 9 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டார்கள்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.17 17:09:28 +0530

Principal District Judge,
Dindigul.